**O.S. No. 356/2013**

**Date:30/07/2019**

**பி.வா.சா-2 திரு.ஸ்ரீதர், த.பெ.வீரணக்கோனார்.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

4-ம் பிரதிவாதி ரமிலா எனது மனைவி என்றால் சரிதான். தாவா சொத்து அவர் பெயரில் தான் வாங்கப்பட்டது என்றால் சரிதான். கே.சி.குருசாமி மற்றும் கே.சி.சேதுராமன் ஆகியோர் சகோதரர்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து குறித்து வில்லங்கம் பார்த்தோமா என்றால் பார்த்தேன். வில்லங்கம் குறித்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வருவாய் துறை ஆவணங்களை தாவா சொத்து குறித்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 04.04.2019 அன்று நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்தை எனது மனைவி வேறு ஒருவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். என் மனைவிக்கு சரியான உரிமையில்லாத நபரிடம் தாவா சொத்தை கிரையம் வாங்கியதால் அந்த கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. வாதி இந்த சொத்துக்கு கூட்டு உரிமையாளர் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.